*கவனிக்க.- 2016.04.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1966 - 2016 මැයි මස 06 වැනි සිකුරාදා - 2016.05.06**

*1966 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 612 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 617 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 620 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 613 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** ரஞ்சன் ராமநாயக்க பவுண்டேசன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, மாச்சு 11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2016, மே மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மே மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப் பத்திர அறிவித்தல்கள்

## வனஜீவராசிகள் மற்றும் வலுவாதார அபிவிருத்தி அமைச்சு தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம்

*அவிசாவளை ஈரவலய தாவரவியல் பூங்காவின் தேயிலைத் தோட்டத்தை குத்தகைக்கு விடல்*

*தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற அவிசாவளை, இலுக்கோவிட்ட ஈர வலய தாவரவியற் பூங்காவிற்குச் சொந்தமான 08 ஏக்கர்கள் விஸ்தீரணம் கொண்ட தேயிலைத் தோட்டத்தை ஒரு வருட காலத்திற்கு சிறந்த முறையில் பேணி தேயிலைக் கொழுந்து பறித்துக் கொள்வதற்காக தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களத்தின் பேரளவிலான பொருட் கொள்வனவுச் சபையின் தலைவரால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.*

*2. விலை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016, மே மாதம் 27 ஆம் திகதி மு.ப.10.00 மணியாகும், விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்ததும் விலைமனுக்கள் திறக்கப்படும். அப்போது விலைமனுக்களைச் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற முகவர்கள் சமுகமளிக்க முடியும்.*

*3. கேள்விப்பத்திர மாதிரிகள் மற்றும் ஏனைய விபரங்களை பேராதனை இலக்கம் 1094, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களத்தின் பிரதான பணிமனையில் 2016, மே மாதம் 26 ஆந் திகதி மாலை 3.00 மணி வரை அலுவலக நேரத்தினுள் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக விலை மனுதாரர்கள் மீளளிக்கப்படாத ரூபா 2000 இனை வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பொது 172 பற்றுச் சீட்டினை சமர்ப்பித்தல் வேண்டும்.*

*4. விலை மனுதாரர்களுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்க அவ்விண்ணப்பங்களின் இரு பிரதிகள் வழங்கப்படும். அவற்றை நிரப்பி மூலப் பிரதி மற்றும் துணைப்பிரதி எனக் குறிப்பிட்டு இரண்டு உறைகளில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வுறைகளில் திறக்க முடியுமான இடங்களை முத்திரையிட்டு அல்லது இறப்பர் முத்திரையைப் பதித்து அனுப்புவது கட்டாயமாகும். அவ்வாறே அவ்வுறைகளின் இடப்பக்க மேல் மூலையில் "**அவிசாவளை ஈர வலய தாவரவியல் பூங்காவின் தேயிலைத் தோட்டத்தை குத்தகைக்கு விடல்**" எனக் குறிப்பிடல் வேண்டும்.*

*5. நிரப்பப்பட்ட விலைமனு விண்ணப்பப்படிவங்களை **தலைவர், பேரளவிலான பொருட்கொள்வனவுச் சபை, தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம், த.பெ.இல. 14, பேராதனை.** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இல்லையேல் கையில் எடுத்து வந்து கேள்வி ஆவணங்களை இடுவதற்காக திணைக்களத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் இட முடியும். உரிய நேரத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும்.*

*6. கேள்விப்பத்திர ஆவணங்களுடன் ரூபா 50,000 பெறுமதியான, 90 நாட்களுக்குச் செல்லுபடியாகும் பிணை ஒன்றினை அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.*

*7. பொருத்தமான மனுதாரர் ஒருவரை தெரிந்தெடுப்பதற்கான முழுமையான உரிமை திணைக்களத்தின் ( பேரளவிலான) பொருட்கொள்வனவுச் சபைக்கே உரியதாகும். அது தொடர்பில் ஏதேனுமொரு வகையில் அழுத்தங்களைப் பிரயோகிப்பதானது தெரிவு செய்யப்படுவதற்கான தகுதியீனமாகக் கொள்ளப்படும். அவ்வாறே இந்த விலைமனு அறிவித்தலில் அல்லது விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்படாத இவ்விடயம் குறித்த யாதேனுமொரு விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானமெடுக்கும் முழுமையான உரிமை தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கே உரியதாகும். இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவையெனில் 081- 2388293 என்ற தொலைபேசி இலக்கத்தினூடு திணைக்களத்தின் பிரதம கணக்காளரைத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.*

*தலைவர்,*
*திணைக்களத்தின் பேரளவிலான பொருட்கொள்வனவுச் சபை,*

*தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம்,*
*பேராதனை.*
*2016 , ஏப்பிறல் 21.*

*5-22*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் 2016 யூலை முதல் 2017 யூன் வரை கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை

**எனது இலக்கம்: ARA/ ADM/ ADMIN/6/7/5**

*2016, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2017, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்காக 1982 , ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இத்துடன் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையின் படி கள்ளுத்தவறணை விற்பனைக்காக குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமைவாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய கேள்விப் பத்திரத்திற்கான பணம் வைப்புச் செய்தமைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டும் சம்பந்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தொகையில் 15 % பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் பெயரிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் இலக்கம் ............. கள்ளுத் தவறணைக்காக , கேள்விப்பத்திரங்கள் கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையின் படி தவறணையின் பெயரும் இலக்கமும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு 2016.05.17 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் முகமாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இட வேண்டும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.*

*5. 2016.05.17 ஆந் திகதி காலை 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் அப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.குறித்த திகதியில் விற்கப்படாத தவறணைகள் 2016.06.07 ஆந் திகதி முற்பகல் 10.30 மணியளவில் மறுவிற்பனைக்காக விடப்படும். அன்றைய தின ஏல முன்வைப்பு குறித்த வர்த்தமானியின் பிரமாணங்களுக்கு அமைவாக இடம்பெறும்.*

*6. இது தொடர்பான மேலதிக விபரங்களை ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

டபிள்யூ. ஆர்.ஏ.என். எஸ். விஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
ஆரச்சிக்கட்டுவ.

பிரதேச செயலகம்,
ஆரச்சிக்கட்டுவ,
2016, ஏப்பிறல் 12.

**அட்டவணை**

| பிரிவு | கிராமம் | தவறணை இலக்கம் | கேள்விப் பத்திரங்கள் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| ஆரச்சிக்கட்டுவ | கறுக்குப்பனை | 10 | 2016.05.17 மு.ப.10.30 | 1,000.0 |
| ஆரச்சிக்கட்டுவ | ஆரச்சிக்கட்டுவ | 11 | 2016.05.17 மு.ப.10.30 | 1,000.0 |
| ஆரச்சிக்கட்டுவ | பத்துளுஓய | 12 | 2016.05.17 மு.ப.10.30 | 1,000.0 |

5-13

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் கோட்டைமுனை TT-2 ஆம் இலக்க 2016.07.01 திகதி தொடக்கம் 2017 .06.30 ஆந் திகதி வரை கள்ளுத் தவறணை மீள் குத்தகை விற்பனை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982 ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விற்பனை செய்யவும் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட கோட்டைமுனை கள்ளுத்தவறணைக்கான 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2017 யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐநூறு ரூபா ( ரூபா1500) பணத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் என்ற பெயரில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினையும், பெறுமதிச்சான்றிதழையும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2016.05.13 ஆந் திகதி முதல் 2016.06.03 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதி சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதி சான்றிதழின் மூலப் பிரதி கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் இப்பெறுமதிச் சான்றிதழுடன் காணிப்பதிவாளரினால் வழங்கப்படும் காணிவரலாற்றுச் சுருக்கப்பிரதியும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (இது கேள்விப்பத்திரம் விநியோகிக்க ஆரம்பிக்கப்பட்ட தினத்திற்கு பிந்திய தினத்தில் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

3. கேள்விப் பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தாலும், மேற்படி 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்படாமலிருந்தாலும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012/01/05 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வெ. தவராஜா,
பிரதேச செயலாளர்,
மண்முனை வடக்கு,
மட்டக்களப்பு.

பிரதேச செயலகம்,
மண்முனை வடக்கு,
மட்டக்களப்பு,
2016, ஏப்பிறல் 18.

### அட்டவணை

கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் | TT No. 2 | 2016.06.03 | பி.ப. 3.00 |

குறிப்பு.- 1. கேள்விச் சபை 2016.06.03 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குக் கூடும்.
2. விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2016.06.17 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்கு நடைபெறும்.

5-132

**மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவில்**
**2016.07.01 ஆந் திகதி தொடக்கம் 2017.06.30 ஆந் திகதி வரை**
**கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஒகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 1982 ஆம் வருட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி பிரதேசத்திற்குட்பட்ட கள்ளுத்தவறணைக்கான 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2017 யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐநூறு ரூபா (1500) பணத்தை ஆரையம்பதி பிரதேச செயலாளரிடம் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினையும், சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2016.05.09 ஆந் திகதி முதல் 2016.05.20 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.*

*2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதி சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதி சான்றிதழின் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் அவை நிராகரிக்கப்படும்.*

*4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.*

*5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.*

*6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012/01/05 ஆம் திகதிய சுற்றுநிரூபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)*

*7. ஏனைய விபரங்கள் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*(திருமதி) ந. சத்தியானந்தி,*
*பிரதேச செயலாளர்,*
*மண்முனைப்பற்று.*

*பிரதேச செயலகம்,*
*மண்முனைப்பற்று.*
*2016, ஏப்பிறல் 20.*

**அட்டவணை**

*கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்*

| கள்ளுத் தவறணைக்குரிய பிரதேச செயலாளர் பிரிவு | தவறணை அமைய வேண்டிய இடம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| மண்முனைப்பற்று எல்லைக்குள் | ஆரையம்பதி தெற்கு கிராம அலுவலர் பிரிவு | 2016.05.23 | மு.ப. 9.00 |

*குறிப்பு.- 1. கேள்விச் சபை 2016.05.23 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்குக் கூடும்.*
*2. விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2016.06.06 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.*

5-153

## மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகப் பிரிவில் வாகரை 2016.07.01 ஆந் திகதி தொடக்கம் 2017.06.30 ஆந் திகதி வரை கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982 ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 1982 ஆம் வருட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு வாகரை பிரதேசத்திற்குட்பட்ட வாகரை கள்ளுத்தவறணைக்கான 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2017 யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும், கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐநூறு ரூபா (1500) பணத்தை கோரளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினை, சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2016.05.16 ஆந் திகதி முதல் 2016.05.23 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதி சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதி சான்றிதழின் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் அவை நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012/01/05 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் வாகரை வடக்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(செல்வி) எஸ்.ஆர். ராகுலநாயகி
பிரதேச செயலாளர்,
கோரளைப்பற்று வடக்கு
வாகரை.

பிரதேச செயலகம்,
கோரளைப்பற்று வடக்கு.
வாகரை,
2016, ஏப்பிறல் 08.

### அட்டவணை

கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| பால்ச்சேனை கிராம அலுவலர் பிரிவு | TT No. 5 | 2016.05.24 | மு.ப. 11.30 மணி |

குறிப்பு.- 1. கேள்விச் சபை 2016.05.24 ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்குக் கூடும்.

2. விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2016.06.09 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு நடைபெறும்.

5-157

# உத்தியோக தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : கூல் என்ட் வைல்ட் ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பிவி 112378
பதிவு முகவரி : இல. 47, அலெக்சான்ரா பிளேஸ், கொழும்பு -7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.11

கோர்ப்பரேட் அட்வைசரி
சேர்விசஸ் ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்கள்.

5- 12

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : கமாக்னி கிலோன் ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 111763
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.23
பதிவு முகவரி : இல. 185, வண. முறுத்தட்டுவ ஆனந்த நாஹிமி மாவத்தை, ( திம்பிரிகஸ்யாய வீதி) கொழும்பு 5

பீ.டபிள்யூ. கோர்ப்பரேட் செக்ரடேரிஸ்
( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்.

5- 26

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : எஸ்ட்ரேட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112655
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.24
பதிவு முகவரி : இல. 10, எல்பர்ட் கிறசன்ட், கொழும்பு 7

கம்பனிச் செயலாளர்.

5- 50/1

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : பிரெக்மா பாமா ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112702
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.28
பதிவு முகவரி : இல. 404/4,கடுவளை வீதி, தலங்கம வடக்கு, பத்தரமுல்லை

கம்பனிச் செயலாளர்.

5- 50/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பிரின்ட்செல் லங்கா (பிறைவெட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப் பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : பிரின்ட்செல் லங்கா ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112714
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.28
பதிவு முகவரி : இல. 175/17, நாயக்கந்தை, ஹெந்தலை, வத்தளை

எப் ஜே.என்ட் ஜீ டீ சேரம்
சட்டத்தரணி

பிரின்ட் செல் லங்கா ( பிறைவெட்) லிமிட்டெட்

5- 60

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : ஹோமா ஃபுட் லங்கா ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112758
பதிவு முகவரி : இல. 47, அலெக்சான்ரா பிளேஸ், கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.29

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்கள்

5- 62

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : எச். என்.எஸ். இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112677
பதிவு முகவரி : இல. 47, அலெக்சான்ரா பிளேஸ், கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.28

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்கள்

5- 63

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : டிக்லாக் ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112815
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.31
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3

கம்பனியின் பெயர் : எட்வூட் லங்கா ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112832
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.31
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3

கம்பனியின் பெயர் : பெக்கட் கெபிட்டல் ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112836
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.31
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3

கம்பனியின் பெயர் : ட்விட் கெபிட்டல் ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112837
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.31
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3

கம்பனியின் பெயர் : ஓடன் ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112813
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.31
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3

கே.எச்.எல். கோர்ப்பரேட்
சேர்விசஸ் லிமிட்டெட்
செயலாளர்கள்

2016.04.07.

5- 66/1

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : த லெமனேட் குறூப் ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112752
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.29
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3

கம்பனியின் பெயர் : கார்ட்லண்ட் ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112753
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.29
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3

கம்பனியின் பெயர் : பிளைட்டன் ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112754
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.29
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3

கே.எச்.எல். கோர்ப்பரேட்
சேர்விசஸ் லிமிட்டெட்
செயலாளர்கள்

2016.04.05

5- 66/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கு அமைவாக 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி ' கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : கென்ரிட் இம்போட்ஸ் ( பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112478
பதிவு முகவரி : இல. 10 B, 15 ஆம் ஒழுங்கை, கொழும்பு 03

மு. புஸ்பராஜ்
கம்பனியின் செயலாளர்

5- 70

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : சீ.எஸ். ஈ. கிளியர்(பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 112681
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.03.28

*பதிவு முகவரி :* இல. 4/01, வேல்ட் ட்ரேட் சென்டர், வெஸ்ட் ப்ளொர், எக்சலன் சதுக்கம், கொழும்பு 1

கோர்ப்பரேட் சேர்விசஸ்
( பிறைவெட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்

5- 81

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர் :* எனிமல் வெனொம் ரிசேர்ச் இன்டர்நெஷனல் (பிறைவெட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவிலக்கம் :* பீவீ 112214
*பதிவு முகவரி :* லெவல் -06, ஈஎல்பி, வேல்ட் ட்ரேட் சென்டர், கொழும்பு 1
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2016.03.03

கம்பனிச் செயலாளர்கள்

5- 83

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர் :* இன்டஸ்ட்ரியல் டெவெலொப்மன்ற் என்ட் ரிசர்ச் எலயன்ஸ்(பிறைவெட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவிலக்கம் :* பீவீ 109677
*பதிவு முகவரி :* இல. 143, தேவத்தை வீதி, ராகமை

5- 84

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர் :* குளோபல் பிரீமியர் டெக் டிஸ்ரிபியூஷன் (பிறைவெட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவிலக்கம் :* பீவீ 109841
*பதிவு முகவரி :* இல. 5, வெவசெட் பிளேஸ், கொழும்பு 6

5- 85

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர் :* மெச்சியொன் டெக்னொலொஜிஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவிலக்கம் :* பீவீ 109636
*பதிவு முகவரி :* இல. 33 /1 , டி பொன்சேக்கா பிளேஸ், கொழும்பு 5

5- 86

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர் :* குளோபெக்டிவ் ஹோல்டிங்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
*பதிவு அலுவலகம் :* ஒன் த்ரீ டுவென்டி அப்பார்ட்மெண்டஸ், டவர் 1, பிளாட் T 1-16B1, யூனியன் பிளேஸ், கொழும்பு 2
*கம்பனி பதிவிலக்கம் :* பிவி 111269

5- 87

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர் :* கெம்லோ ஹோல்டிங்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
*பதிவு அலுவலகம் :* இல. 115/17, விஹார மாவத்தை, ஹேவாகம, கடுவெல
*கம்பனி பதிவிலக்கம் :* பிவி 110795

5- 88

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர் :* எப் ஜி டி கன்சல்டிங் (பிறைவெட்) லிமிட்டெட்

கம்பனி பதிவிலக்கம் : பிவீ 112846
பதிவு முகவரி : இல. 40, காலி வீதி, கோட் 2, கொழும்பு 3

செக்ரெடேரியஸ் ( பிறைவெட்)
லிமிட்டெட், பிவீ 5958

5- 120

---

### அற்றோணித் தத்துவத்தை மீளப்பெறல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு இத்தால் அறியத்தருவதாவது, 1404 ஆம் இலக்க 2004.09.05 ஆம் திகதிய கொழும்பு பிரசித்த நொத்தாரிசு நா.ய. குணசீலன், முகதாவில் மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் , தெஹிவளை, இன்னர் பெயார்லைன் வீதி, இல. 32 C யைச் சேர்ந்த செல்வரஞ்சனி பிரபாகரன் திஃமு. செல்வரட்ணம் என்பவரின் பெயரில் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெஹிவளை, இன்னர்பெயார்லைன் வீதி, இல. 32 C, ஐச் சேர்ந்த அம்பலவாணர் பிரபாகரன் ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித்தத்துவப் பத்திரம் 2016.04.12 முதல் மீளப்பெறுவதோடு இரத்துச் செய்யப்படுகின்றது. இன்று முதல் அற்றோணி தத்துவக்காரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

அம்பலவாணர் பிரபாகரன்.

2016. 04.12.

5- 07

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கல்கிஸ்ஸை, 21, சிறிபால வீதி, மவுன்ட் கோட் 4/3 எனும் முகவரியில் குடியிருக்கும் ரவீந்திர தயந்த ஜொஷுஆ ஆகிய அற்றோணிக்காரரான என்னால் எனது சட்டப்படியான அற்றோணிக்காரராக உபேந்திர ருசென்த் எட்வார்ட் கலகெதர என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு டி.எஸ். ஜயசுந்தர அவர்களால் 2015, ஒற்றோபர் 26 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 90 என்ற அற்றோணித்தத்துவப் பத்திரம் மூலமாக எனது சார்பாக செயற்படும் அதிகாரம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்கள் அனைவருக்கும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

ஆர்.டி.ஜொஷுஆ.

2016.04.22.

5-150

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நெதர்லாந்து, ராம்ஸ்டொன்ஸ்வீர், 4941 ஈ ஏ. கடேபாட் 19 எனும் முகவரியில் குடியிருக்கும் பீற்றர் ஜொஹானஸ் ஒட்டோ வன் டில்பேர்க் ஆகிய அற்றோணிக்காரராகன என்னால், எனது சட்டப்படியான அற்றோணிக்காரராக கொழும்பு 8, பொரளை குறுக்குத் தெரு இல. 23 எனும் முகவரியில் குடியிருக்கும் சுபெம் தேவசஹா செபஸ்தியன் த சில்வா என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு டி. எஸ். ஜயசுந்தர அவர்களால் 2012, சனவரி 13 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட இல. 50, என்ற அற்றோணித்தத்துவப்பத்திரம் மூலமாக எனது சார்பாக செயற்படும் அதிகாரம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்கள் அனைவருக்கும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

பீ.ஜே.ஓ. வி. டில்பேர்க்.

5-151

---

## ஏல விற்பனைகள்

### டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ

(முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**296 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்**

**கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று கருங்கொடித்தீவில் அமைந்துள்ள காணித்துண்டு**

**(காணியின் விஸ்தீரணம் : வடக்கிலிருந்து தெற்கு வரை 7 3/4 பாகம்( 45 அடி) மற்றும் கிழக்கிலிருந்து மேற்கு வரை 18 பாகம்**

**( 108 அடி) .)**

**தற்போது கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அக்கரைப்பற்று நகர சபை எல்லைக்கு உட்பட்ட கருங்கோடித்தீவு 4 ஆம் குறிச்சியில் அமைந்துள்ள, அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் ஏ.ஜீ.மொஹமட் தையூப் அவர்களால் வரையப்பட்ட 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆம் திகதியிடப்பட்ட MT/403/11 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு**

**(காணியின் விஸ்தீரணம் : பதினைந்து தசம் இரண்டு பேர்ச்சுகள்**

**(0ஏ. 0றூ 15.2பே.அல்லது 0.0385 ஹெக்டேயர்)**

**அதிலுள்ள அனைத்தும் அடங்கலாகவும் MT/403/11 ஆம் இலக்க வரைபடத்தின் ஊடாகச் செல்லும் பாதை உரிமையுடனும்**

அம்பாறை பிரசித்த நொத்தாரிசு சசிகா நிரோஷினி செக்ஸ்டஸ் டி சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதியிடப்பட்ட 296 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அக்கரைப்பற்றில் ஜௌசன் எனும் பெயரில் தனி உரிமைத்துவத்துடன் வியாபாரத்தை நடத்தி வரும் ஆதம் லெப்பை தாஹா சிறாஜுதீன் அவர்களால் டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ க்கு (முன்னர் வரையறுக்கப்பட்ட டிஎப்சீசீ வர்த்தன வங்கி) அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து டீஎப்சீசீ வங்கி பீஎல்சி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி 2016ஆம் ஆண்டு மே மாதம் 26ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவு 1,25,000 ரூபா ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
124 வருடகால மகோன்னத சேவை.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும்: |
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி. | கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680 2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

5-49

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல: 71345920

வத்தளை, ஹுணுப்பிட்டிய, ஸ்டேசன் வீதி, இல. 626 /பி என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. தென்னகோன் முதியன்சேலாகே திகிரி பண்டா தென்னகோன் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2011.10.28 ஆந் திகதிய 1730 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2011.10.14 ஆந் திகதிய ''தினமின'' மற்றும் 2011.10.14 ஆந் திகதிய ''டெய்லி நியுஸ்'' , ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.33, தல்கொடபிட்டிய மாவத்தை, மல்கடுவாவ,குருநாகல் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. H.W. அசோக ஜயலால் 2016.06.02 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு முதலாவது சொத்தும் பி.ப.2.30மணிக்கு இரண்டாவது சொத்தும் அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரிபற்றுவில் களனிய பிரதேச சபை எல்லையினுள் (மஹர - கடவத்தை உப அலுவலகம்) ஹுணுப்பிட்டிய கிராமத்தில் அமைந்த கெட்டகெலகஹவத்த என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். சமரவிக்ரம தயாரித்த 1995, ஏப்பிறல் 5 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 119/1995 இல் விபரித்த துண்டு 1A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : வரைபடம் இல. 9450 இல் துண்டு 1 இன் மீதிப்பாகமும் ; கிழக்கில் : 15 அடி அகல ரோட்டும் ; தெற்கில் : வரைபடம் இல. 9450 இல் துண்டு 3 இன் மீதிப்பாகமும் (15 அடி அகல ரோட்) ; மேற்கில் : அதே காணியின் வரைபடம் இல. 9450 ல் துண்டு 1 இன் மீதிப்பாகமும் எல்லைகளாகக் கொண்டு பன்னிரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரண முடைய இக்காணி கொழும்பு காணிப் பதவிகத்தில் C 551/67 இல் பதிவுசெய்யப்பட்டது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரிபற்றுவில் கொனாஹேனயில் அமைந்த கொனாஹேன எஸ்டேட் (தல்கஸ் ஆகாஸ எஸ்டேட்) என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஏ. கே. ஜே. பெரேரா தயாரித்த 1998, ஒற்றோபர் 4 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1988 இல் துண்டுL என விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு M உம் ; கிழக்கில் : துண்டு J (12 அடி அகல பாதைக்கு ஒதுக்கப்பட்டது); தெற்கில் : துண்டு K உம் ; மேற்கில் : வரைபடம் இல. 399/A இல் துண்டு 35 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1988 இன்படி பத்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10பே.) அல்லது 0.02529 ஹெக்டேயர்கள் விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C 504/90 இல் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் கீழே விபரித்த ஒதுக்கப்பட்ட பாதை நெடுகவும் வழி உரிமையும் ஆகும்:-

1. மேற்குறிப்பிட்ட கொனாஹேனயில் அமைந்த கொனஹேன எஸ்டேட் (தல்கஸ் ஆகாஸ எஸ்டேட்) என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஏ. கே. ஜே. பெரேரா தயாரித்த 1998, ஒற்றோபர் 4 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1988 இல் துண்டுD என (15 அடி அகல பாதைக்கு ஒதுக்கப்பட்ட) விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு C உம் ; கிழக்கில் : வரைபடம் இல. 399A இல் துண்டு 36 உம் (16 அடி அகலப் பாதை) ; தெற்கில் : துண்டு E உம் ; மேற்கில் : துண்டு J (12 அடி அகல பாதை) ; எல்லைகளாகக் கொண்டு நான்கு தசம் இரண்டு சைபர் (0ஏ.0றூ.4.20பே.) அல்லது 0.01062 ஹெக்டேயர்கள் விஸ்தீரண முடையது. இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C 486/272 இல் பதிவுசெய்யப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட கொனாஹேனயில் அமைந்த கொனாஹேன எஸ்டேட் (தல்கஸ். ஆகாஸ எஸ்டேட்) என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஏ. கே. ஜே. பெரேரா தயாரித்த 1998, ஒற்றோபர் 4 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1988 இல் துண்டு J என விபரித்த (12 அடி அலகப்பாதைக்கு ஒதுக்கப்பட்ட) பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு A உம் ; கிழக்கில் : துண்டுகள் C, E, F, G. I மற்றும் D உம் (15 அடி அகலப் பாதைக்கு ஒதுக்கப்பட்ட); தெற்கில் : வரைபடம் இல. 399A இல் துண்டு 37 உம் (12 அடி அகல பாதை) ; மேற்கில் : துண்டுகள் K. L. M. மற்றும் N உம் ; எல்லைகளாகக் கொண்டு நான்கு தசம் இரண்டு எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 4.28பே.) அல்லது 0.01214 ஹெக்டேயர்கள் விஸ்தீரணமுடையது. இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C 491/161 இல் பதிவுசெய்யப்பட்டது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. டி. பெர்ணாண்டோ தயாரித்த வரைபடம் இல. 399A இல் விபரித்த துண்டுகள் 36 மற்றும் 37 (பாதைகளுக்கு ஒதுக்கப்பட்ட) நெடுகவும் வழி உரிமையும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

H.A.K. சம்பத்,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
2 ஆம் நகர மேற்தரக் கிளை,
குருநாகல்.

5-103

---

**சம்பத் வங்கி பீஎல்சி**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட விற்பனை அறிவித்தல்

பீ. ஏ. ஆர். சந்திரிக்கா மற்றும் கே. எஸ். பன்னில
கணக்கு இல. 1019 5308 6426

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2008 ஏப்பிறல் 30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009. 09. 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2009.09. 22 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்", "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான குறிப்பிடப்பட்ட ஆறு இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூற்று நாற்பத்தைந்து ரூபா முப்பத்தொன்பது சதம் ( ரூபா 6,16,645.39) 2007 திசெம்பர் 18 ஆந் திகதி முதல் இல.1331 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை செலுத்தித் தீர்க்கும் திகதிவரை ஐந்து இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து இருநூற்றுப் பதின்மூன்று ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூபா 5, 89,213.39) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்குப் பிணையாக வைக்கப்பட்டுள்ள,கீழே அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்ட சொத்துக்கள் ,நிலமனைகளை கண்டி உத்தரவு பெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2016.06.08 ஆந் திகதி மு.ப.10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சி இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

